1967 ஜூலை 17] [திரு கே. ஏ. மதியழகன்]

மசோதா சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(இ) சென்னை நகர நிலவருவாய் வரி வசூல் (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண். 17/1967).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1967-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி-வருவாய் வசூல் (திருத்த) மசோதாவை* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தற்போது 1851-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரிச் சட்டமும், 1867-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி (திருத்தச்) சட்டமும் சென்னை மாநகரில் செயலில் உள்ளன ; 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டம், இம்மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் செயலில் உள்ளது. நிலவரி நீங்கலாக, மாநில அரசுக்குச் சேர வேண்டிய வருவாய் நிலுவைகள் அனைத்தையும், மற்றும் ஒப்பந்த முறிவின் விளைவாக மாநில அரசுக்கு ஏற்பட்ட விரயம் அல்லது சேதத்திற்கான இழப்பீடு உட்பட மாநில அரசுக்குச் சேர வேண்டியுள்ள தொகைகள் அனைத்தையும் 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் நிலவரி நிலுவையை வசூல் செய்வதைப் போலவே வசூல் செய்வதற்கு அச் சட்டத்தின் 52-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. இவை போன்ற விதித் துறைகள், 1851-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரிச் சட்டத்திலும், 1867-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி (திருத்தச்) சட்டத்திலும் காணப்படவில்லை. 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டம் சென்னை மாநகரின் எல்லைக்குள் நிலவரி வசூல் செய்யப்படுவதற்குப் பயன்படாது என்று அச்சட்டத்தின் 64-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரின் எல்லைக்குள் நிலவரியை வசூல் செய்வதற்கு, 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டத்தின் விதித் துறைகள் பயன்படக் கூடாதென்று அச் சட்டத்தின் 64-வது பிரிவின் மூலமாகத் தடை செய்யப்பட்டுள்ளதாய், " நிலவரி நிலுவையைப் போலவே " வசூல் செய்யப்படக் கூடிய எதையும் சென்னை மாநகரின் எல்லைக்குள் அச் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் வசூல் செய்ய முடியாது என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டத்தின் 52-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளதைப் போலவே, 1867-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி (திருத்தச்) சட்டத்திலும் திட்டவட்டமான ஏற்பாடு செய்யப்பட வேண்டியது அவசியமென்று கருதப்பட்டது. ஆனால், நகர நிலவரிச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த பின்னர் சூழ்நிலை மாற்றமடைந்ததன் காரணமாக, நிலவரி நிலுவையை வசூல் செய்வதற்காக இருதிறப்பட்ட சட்டங்கள்—ஒன்று, சென்னை மாநகருக்குப் பயன் படுவதாகவும், மற்றொன்று சென்னை மாநகர் நீங்கலாக இம்மாநிலம் முழுவதற்கும் பயன் படுவதாகவும் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, 1867-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி (திருத்தச்) சட்டத்தை இறுதி செய்து விடவும், இப்போது 1867-ம் ஆண்டு தமிழகச் சட்டம் பயன்படத்தக்க பகுதிகளுக்கு 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டத்தை விரிவு படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டம் ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்குப் பயன்படும் வகையில் திருத்தப்பட்டது. அவ்வாறு திருத்தப்பட்ட சட்டம், ஆந்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து சென்னை மாநிலத்துடன் சேர்க்கப்பட்ட ஆட்சிப் பகுதிகளில் செயலில் இருந்து வருகிறது. ஆந்திரப் பிரதேச சட்டப் பேரவையினால் செய்யப்பட்ட திருத்தத்தின் மூலம் விதித் துறைகளில் புதிய பிரிவு ஒன்றும் இயற்றப்பட்டுள்ளது. இந்தப் புதிய பிரிவு, நிலுவையைச் செலுத்தத் தவறியவருக்குச் சொந்தமான உடைகள், சமையற் பாத்திரங்கள், படுக்கைப் பொருள்கள், சமய

* 1967 ஜூலை 15-ம் தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

வழக்கத்தின்படி மகளிரிடமிருந்து கேட்டு வாங்கக்கூடாதவையும், அவர்கள் அணிந்துள்ளவையுமான அணிகலன்கள், மற்றும் கலப்பைகள், வேளாண்மைக் கருவிகள், ஒரு ஜதை உழவு மாடு, வரும் ஆண்டில் பயன்படுத்துவதற்குத் தேவையான உரம், விதை மற்றும் அரசினல் அறிவிக்கப்படக் கூடிய ஏனைய வகைப் பொருள்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதினின்றும் விலக்கு அளிக்கிறது. தமிழகம் முழுவதிலும் ஒரே மாதிரியான சட்டம் செயலில் இருக்கும்படிச் செய்வதற்காக இம்மாநிலத்தின் பிற பகுதிகளில் செயலில் உள்ள தமிழக வருவாய் வசூல் சட்டத்தைச் சேர்க்கப்பட்ட ஆட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தவும், மேற்சொன்ன சேர்க்கப்பட்ட ஆட்சிப் பகுதிகளில் செயலில் இருக்கும் சட்டத்தை ரத்து செய்து விடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டத்தில் மக்களுக்குப் பயன் தரும் வகையில் அமைந்துள்ள மேற்சொன்ன விதித்துறையைச் சேர்த்து அதனை இம் மாநிலத்தின் ஏனைய பகுதிகளுக்கும் பொருந்தும்படிச் செய்யவும் கருதியுள்ளது.

நண்பகல் 12-00 பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை இயற்றுவதற்கான நோக்கங்களை நான் இப்போது சுருக்கமாகக் குறிப்பிட்டேன். இம்மசோதாவை இப்பேரவை ஏற்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி— "1967-ஆம் ஆண்டு சென்னை நகர நில வருவாய் வரி வசூல் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 17/1967) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5, 6 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கீழ்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"1967-ஆம் ஆண்டு சென்னை நகர நில வருவாய் வரி வசூல் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 17/1967) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்".

மசோதா சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(உஉ) தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு சபைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா" 1967* (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967), கீழே குறிப்பிட்ட உறுப்பினர்கள் அடங்கிய இப் பேரவையின் ஆய்வுக் குழுவின் ஆராய்வுக்கு அனுப்பப்படவேண்டும் :—

1. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.
2. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி.
3. திரு. எஸ். ஜே. இராமசாமி.
4. திரு. என். கிட்டப்பா.

---

* 1967 ஜூலை 15-ம் தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.